## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – ஆதிதிராவிடர் மக்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனைத்து வசதிகளுடன் கூடிய 24 சமுதாயக்கூடங்கள் கட்டுவதற்கு ரூ.14.49 கோடிக்கு நிருவாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(சிஉதி–1)துறை**

**அரசாணை (நிலை) எண். 127** **நாள்: 19.12.2020**

**சார்வரி வருடம் மார்கழி 4,**
**திருவள்ளுவர் ஆண்டு 2051**

படிக்கப்பட்டது:-

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள் 24.03.2020.
2. ஆதி திராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண். எச்1/22013/2019, நாள்.08.05.2020.

*******

**ஆணை:-**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2020-2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் ஏனைய பிற அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிவிப்பினையும் வெளியிட்டிருந்தார்கள்:-

"ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை கொண்டாடும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய 24 சமுதாயக்கூடங்கள் 14.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்"

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதி திராவிடர் நல ஆணையர் குளியல் அறைகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள், மணமேடை, விசாலமான பார்வையாளர்கள் அரங்கம், 2 விருந்தினர் அறைகள், கழிவறைக்கூடம், மேல்நிலைக் குடிநீர் தொட்டி, அவசியமான அறைகலன்கள், பாத்திரங்கள், உணவுமேசை, நாற்காலிகள் அடங்கிய உணவருந்தும் அறை என அனைத்து வசதிகளுடன் கூடிய 24 சமுதாயக்கூடங்கள் கட்டுவதற்கு ரூ.1800.00 இலட்சத்தினை நிதி ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் கீழ்க்காணும் இடங்களில் 24 சமுதாயக் கூடங்களை ரூ.14.49 கோடி (ரூபாய் பதினான்கு கோடியே நாற்பத்தொன்பது

இலட்சம் மட்டும்) மதிப்பில் கட்டுவதற்கு நிருவாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

| வ. எ. | மாவட்டம் | வட்டம் /ஊராட்சி ஒன்றியம் | கிராமம் |
|---|---|---|---|
| 1. | ஈரோடு | சத்தியமங்கலம் வட்டம் | பனையம்பள்ளி கிராமம் |
| 2. | | பவானி ஊராட்சி ஒன்றியம் | மயிலம்பாடி ஊராட்சி (36 குக்கிராமம்) |
| 3. | கிருஷ்ணகிரி | பெலவர்த்தி ஊராட்சி (பர்கூர் ஒன்றியம்) | வள்ளுவர்புரம் காலனி |
| 4. | மதுரை | அலங்காநல்லூர் பேரூராட்சி | வார்டு எண்.14, குறவன்குளம் |
| 5. | நாமக்கல் | அரியூர்நாடு ஊராட்சி | பருத்திமுடிப்பட்டி, சாலக்காடு மந்தை |
| 6. | | திருச்செங்கோடு வட்டம் | கொசவம்பாளையம் |
| 7. | இராமநாதபுரம் | திருப்புல்லானி ஒன்றியம் | கே.கொடிக்குளம் |
| 8. | | மதுரை கோட்டம் (கடலாடி ஊராட்சி ஒன்றியம், கீழசிறுபோது ஊராட்சி) | மேலப்பனையூர் கிராமம் |
| 9. | சிவகங்கை | சிவகங்கை | தமராக்கி வடக்கு, கொத்தங்குளம் |
| 10. | | இளையான்குடி ஒன்றியம், குறிச்சி ஊராட்சி | குறிச்சி கிராமம் |
| 11. | | கீழ்நெட்டூர் ஊராட்சி | கீழ்நெட்டூர் |
| 12. | தூத்துக்குடி | கோவில்பட்டி சட்டமன்ற தொகுதி | சால்நாயக்கன்பட்டி |
| 13. | | | ராஜாபுதுக்குடி |
| 14. | திருநெல்வேலி | வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி | ஏமன்பட்டி |
| 15. | | திருவெங்கடநாதபுரம் ஊராட்சி | அத்திமேடு |
| 16. | திருவள்ளூர் | பொன்னேரி கோட்டம் | தேர்வாய் கண்டிகை |
| 17. | திருவண்ணா மலை | கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி | அருணகிரி மங்கலம் ஊராட்சி |
| 18. | | செங்கம் வட்டம், புதுப்பாளையம் ஒன்றியம் | வாசுதேவன்பட்டு கிராமம் |
| 19. | திருப்பூர் | பொங்குபாளையம் ஊராட்சி | பொங்குடிபாளையம் ஆதிதிராவிடர் காலனி |
| 20. | | பொங்கலூர் ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சி | கவுண்டம்பாளையம் |
| 21. | | தாராபுரம் சட்டமன்ற தொகுதி | சங்கராண்டாம்பாளையம் பஞ்சாயத்து தானக்கரை |
| 22. | வேலூர் | அரக்கோணம் சட்டமன்ற தொகுதி நாகவேடு ஊராட்சி | நாகவேடு ஆதிதிராவிடர் காலனி |
| 23. | விழுப்புரம் | மரக்காணம் வட்டம் | கைப்பனை கிராமம் |
| 24. | திண்டுக்கல் | நிலக்கோட்டை வட்டம், சிலுக்குவார்பட்டி ஊராட்சி | மன்னவராதி கிராமம் |

4. மேற்காணும் 24 சமுதாயக்கூடங்களுக்கான திட்டமதிப்பீடுகள், தாட்கோ பொறியாளர்களின் கையொப்பத்துடன் ஆதி திராவிடர் நல ஆணையரிடமிருந்து பெறப்பட்டு 2021–2022 ஆம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.47870/ நிதி(ஆதி(ம)பந)/2020, நாள் 16.12.2020–இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஓட்டெம் டாய்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

**பெறுநர்:**

ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறை, சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை– 600 018 / 6/ 9 / 35.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(ஈரோடு/கிருஷ்ணகிரி/மதுரை/நாமக்கல்/இராமநாதபுரம்/
சிவகங்கை/தூத்துக்குடி/திருநெல்வேலி/திருவள்ளூர்/
திருவண்ணாமலை/திருப்பூர்/வேலூர்/திண்டுக்கல்/விழுப்புரம்)
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்,
(ஈரோடு/கிருஷ்ணகிரி/மதுரை/நாமக்கல்/இராமநாதபுரம்/
சிவகங்கை/தூத்துக்குடி/திருநெல்வேலி/திருவள்ளூர்/
திருவண்ணாமலை/திருப்பூர்/வேலூர்/திண்டுக்கல்/விழுப்புரம்)
மாவட்ட கருவூல அலுவலர்கள்,
(ஈரோடு/கிருஷ்ணகிரி/மதுரை/நாமக்கல்/இராமநாதபுரம்/
சிவகங்கை/தூத்துக்குடி/திருநெல்வேலி/திருவள்ளூர்/
திருவண்ணாமலை/திருப்பூர்/வேலூர்/திண்டுக்கல்/விழுப்புரம்)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–600 008

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளரின்
தனிச் செயலர், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5/அநமு1) துறை, சென்னை–600 009.
நிதி (ஆதி(ம)ப.ந/வ.செ.பொ–2) துறை, சென்னை –600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.